## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு நவம்பர்திங்கள் 14–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசித் திங்கள் 28–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.04/2025 –ல்**
**வழக்கிடை விண்ணப்ப எண் 255/2016**

**K. முத்து (எ)முத்துசாமி** ..**மனுதாரர்/வாதி**

**–எதிர்–**

**01. K.சின்னு**
**02.முனியன்**
**03.R.இன்பவள்ளி**
**04.பாலாஜி**
**05. சந்தியா**
**06. மணி** ...**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

IIIrd ADJ Court, Salem

இம் மனு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.V.மணிகண்டன்** அவர்களும் 02-ஆம், 04முதல் 06-ஆம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை எதுவும் தாக்கல்செய்யப்படாத நிலையில் 01-ஆம், 03-ஆம் எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.P.கோபிநாத்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்து வந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

## ஆணையுரை

முன்பு ஓமலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றமாக இருந்த நீதிமன்றத்தின் குற்றப் பல்வகை மனு எண் 4883/2012 சம்மந்தமான கோப்புகளை இந்த வழக்கில் தருவிக்கக் கோரி உரிமையியல் நடைமுறை சட்டத்தின் 74-ஆம் விதியின்கீழ் மனுதாரர்/வாதியால் இந்த மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

01. மனுதாரர் முதலேற்பு வழக்கில் வாதி ஆவார். மனுதாரர் கந்தமுப்பன் என்பவரின் மகன் ஆவார். மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரியும் இதர நிவாரணங்கள் கோரியும் முதலேற்பு வழக்கைத் தாக்கல்செய்தார். இந்த வழக்கை எதிர்த்து நடத்தும் 01-ஆம், 03-ஆம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மனுதாரர்/வாதி கந்தமுப்பனின் மகன் இல்லை என்றும் கந்தமுப்பனின் மகன்களில் ஒருவரான முத்துசாமி 20 ஆண்டுகளுக்குமுன் இறந்துவிட்டதாகவும் அவருடைய ஒரே வாரிசு 03 ஆம் எதிர்மனுதாரர்/03-ஆம் பிரதிவாதி என்றும் குறிப்பிட்டு எதிர்வாதம் முன் வைத்துள்ளனர். கந்தமுப்பனின் மகன் முத்துசாமியின் இறப்புச் சான்றிதழ், அவருடைய வாரிசுச் சான்றிதழ் ஆகிய இரண்டும் மோசடியானவை. அவ்விரு ஆவணங்கள் சம்மந்தமான கோப்புகளை தாக்கல்செய்யுமாறு ஓமலூர் வட்டாட்சியருக்கு இந் நீதிமன்றம் ஆணையிட்டது. ஓமலூர் வட்டாட்சியர் பிரதிவாதிகள் தரப்பு 02-ஆம் சான்றாளராக சாட்சியம் அளித் -துள்ளார். கந்தமுப்பனின் மகன் முத்துசாமி 10.03.1985-ஆம் தேதியன்று இறந்துவிட்டதாகவும் அவருடைய இறப்பு 09.02.2013-ஆம் நாள்தான் நீதித்துறை குற்றவியல் நடுவரின் ஆணைப்படி சம்மந்தப்பட்டப் பதிவு அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

02. மனுதாரர்/வாதி தொடர்ந்து விசாரித்ததில் ஓமலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் குற்றப்பல்வகை மனு எண் 4883/2012-இல் 21.01.2013-ஆம் தேதியன்று

பிறப்பித்த ஆணைப்படி கந்தமூப்பனின் மகன் முத்துசாமி என்ற பெயரில் இறப்புச் சான்று வழங்கப்பட்டிருப்பதும் அதனடிப்படையில் வாரிசுச் சான்று வழங்கப்பட்டிருப்பதும் தெரியவந்தது.

03. மேற்சொன்ன நீதிமன்றத்தில் குற்றப்பல்வகை மனு எண் 4883/2012வழக்குக் கோப்புகளை இந்த வழக்கில் தருவித்து பரிசீலித்தால் கந்தமூப்பனின் மகன் முத்துசாமி என்ற பெயரில் வழங்கப்பட்டுள்ள இறப்புச் சான்றிதழ் பொய் என்பதும் மனுதாரர்/ வாதிதான் கந்தமூப்பனின் மகன் என்பதும் நிரூபணம் ஆகும். ஆகையால், மேற்சொன்ன வழக்கின் கோப்பை இந்த வழக்கில் தருவித்து ஆணையிட வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

04. மனுதாரர்/வாதி கந்தமூப்பனின் மகன் முத்துசாமி இல்லை. கந்தமூப்பனின் மகன் முத்துசாமி இறந்துவிட்டார். அவருடைய ஒரே வாரிசு 03-ஆம் பிரதிவாதி ஆவார். மனுதாரர்/வாதி கந்தமூப்பனின் 02-ஆம் மனைவி கந்தாயி மூலம் பிறந்த முத்துசாமி இல்லை. மனுதாரர்/வாதியின் பெயர் முத்து மட்டுமே ஆகும். மனுதாரர்/வாதி பொய்யான சங்கதிகளை சொல்லி முதலேற்பு வழக்கைத் தாக்கல்செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள்/ 01-ஆம், 03-ஆம் பிரதிவாதிகள் குற்றப்பல்வகை மனுஎண் 4883/2012-இல் பொய்யான ஆவணங்களை தாக்கல்செய்து முத்துசாமியின் இறப்பை பதிவு செய்யவில்லை. மனுதாரர்/வாதி மேற்சொன்ன வழக்கின் சான்றிட்ட நகல் பெற்று இந்த வழக்கில் தாக்கல்செய்ய முடியும். ஆகையால், இந்த மனுவைத் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

IIIrd ADJ Court, Salem

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

05. **இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

## தீர்முடிவு

**06.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. மனுதாரர்/வாதி வழக்குச் சொத்தோடு சம்மந்தப்பட்ட கந்தமூப்பனின் மகன் முத்துசாமி என்பது மனுதாரர்/வாதி தரப்பு வாதம் ஆகும். வழக்குச் சொத்து சம்மந்தப்பட்ட கந்தமூப்பனின் மகன் முத்துசாமி 1985-ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்பதும் மனுதாரர்/வாதி கந்தமூப்பனின் மகன் முத்துசாமி இல்லை என்பதும் எதிர்மனுதாரர்/01-ஆம், 03-ஆம் பிரதிவாதிகள் தரப்பு எதிர்வாதம் ஆகும்.

**07.** வழக்குச் சொத்தோடு சம்மந்தப்பட்ட கந்தமூப்பனின் மகன் முத்துசாமிதான் மனுதாரர்/வாதி என்பதை நிரூபிக்க ஓமலூர் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்ற குற்றப் பல்வகை மனு எண் 4883/2012 வழக்கின் கோப்பில் உள்ள எதுவும் உதவாது என்பது ஒருபுறமிருக்க வாதியின் கூற்றை நிரூபிக்க அது மட்டுமே ஒரே வழி என்று சொல்ல முடியாது. மேலும் மனுதாரர் தருவிக்கக் கோரும் ஆவணங்களின் சான்றிட்ட நகலை பெற்று தாக்கல்செய்வதற்கான அனைத்துச் சாத்தியக்கூறுகளும் உள்ள நிலையில் அவற்றை நீதிமன்ற ஆணை மூலம் இவ்வழக்கில் தருவிக்கக்கோருவது ஏற்புடையதாக இல்லை என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

IIIrd ADJ Court, Salem

## இறுதிமுடிவு

08. இறுதியாக, இந்த மனு தள்ளுபடிச் செய்யப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025—ஆம் ஆண்டு நவம்பர்திங்கள் 14—ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது**

**(ஒப்பம்)வே.புகழேந்தி**
**மூன்றாம் கூடுதல் மாவட்ட /அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:—** இல்லை

III rd ADJ Court, Salem